
ஓ

# வாருங்கள்
# எல்லோரும் சித்தராகலாம்

அழைக்கிறார்! ஞானாச்சாரி[redacted]த்தர் கருவூரார்!



பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி
ஞானாச்சாரியார்
சித்தர் காவிரியாற்றங்கரை கருவூரார்

# சித்தர்கள் மாநாடு

வெளியீடு எண் 333

காணிக்கை ரூ10.00

# பதினெண் சித்தர் மடம்

அம்பத்தூர். சென்னை - 53. தொ.பே.எண்-654447



## ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார்

# சித்தர்கள் மாநாடு

# அறிமுகவுரை :-

அன்புடையீர்,

'வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்' என்று இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியிடுவதன் அவசியம் யாதெனில் இந்நூலின் முதற்பாகத்தைப் படித்து விட்டு அதன் கூற்றுக்களைக் கண்டு வியப்புற்று பல அடியான்களின் 'குமுறல் கடிதங்கள்' வந்தன. அதனை விளக்குமாறு இந்நூல் வெளியிடப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு அடியவனின் குமுறலைக் காண்போம்.

## ஒரு அடியானின் குமுறல்

'தங்களை குருவாக அடைய வேண்டும் என நினைத்தேன். ஆனால் குருவுக்கெல்லாம் குருவானவரை ஒளியின் வடிவானவரை பணிய வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிறது. பதினெண் சித்தர்களை பார்க்க வேண்டும். அவர்களைப் போல் மனம் ஒன்று பட்டநிலை, சித்து விளையாடல் நிலை, சித்து விளையாடல் கலை, மனித நேயம், மருத்துவம், தெய்வங்களை பூசித்தல், மனிதர்களின் மனதிலுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி ஒன்றுபட்டு வாழவைத்தல், எம் மனதிலுள்ள கருத்து வேறுபாடு நீக்கி, மன அழுக்குகளையும் நீக்கி, பஞ்சமா பாதகங்களையும் நீக்கி, சிவயோக நிலை பெறுதல், இவற்றிக்கெல்லாம் எம்மால் குருகுலவாசம் புரியத்தான் முடியவில்லை! என்னுடைய வாழ்க்கைநிலை எனக்குத் தெரியவில்லை! கல்வி ஞானம் நிறைவாகவும் கிடையாது. அஸ்திவாரம் கூட அடிக்கடி கலைந்து விடும்! பிறகு எப்படி யான் சித்தனாவது? எப்படி துன்பப்படுவோரின் கண்ணீரைத் துடைப்பது? வாழ்க்கையில் ஓடுவோரின் கூட்டத்தில் நடக்க

முடியாதவன் ஜெயிப்பது எப்படி? தேவர்களை, அண்டங்களை ஆளுகிறவர்களை பார்ப்பது எப்படி? எல்லாமே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!. இந்த எண்ணங்களையெல்லாம் இந்தப் புத்தகம் என்னுள் எழவிட்டு இந்த எண்ணங்களுக்கு ஏற்ற செயல் இல்லாமல் பிணம் போல் கிடக்கின்றேன்'.

இப்படி பல அடியவர்கள் புலம்பபுகிறார்கள். இவற்றிக்கெல்லாம் வடிகாலாக, வழிகாட்டியாக, வழித்துணையாக ஏற்கனவே நமது பதினெண் சித்தர் மடம் இந்து வேதாதகம பாடசாலை நிகழ்த்தியும், ஆசிரமம், குருகுலம், தருகுலம், கருகுலம், திருகுலம், முதலிய பல நிறுவன நிர்வாகங்களைச் செயலாக்கியும், நமது இந்து வேதக் கருத்துக்களை, செய்திகளை, வரலாறுகளை, வாழ்வியல்களை எளிமையாக எல்லோரும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, உணர்ந்து செயல்பட பாடுபடுகிறது.

மேலும் இந்த அடியானைப் போன்ற இளைஞர்கள் துடிப்புமிக்க உண்மையுள்ள வீர இளைஞர்கள்! இந்து மதத்தை, இந்து வேதத்தை, தமிழ் மொழியைப் பாதுகாக்க முன் வந்தே தீர வேண்டும். நம் மக்கள் தங்களை " தமிழன்" என்று சொல்லிக் கொள்ளவோ "இந்து என்று சொல்லிக் கொள்ளவோ" தெரியாதவர்களாக, புரியாதவர்களாக, விரும்பாதவர்களாக இருக்கின்றனர். இதை முதலில் மாற்றியாக வேண்டும்.

அப்போது தான் தனி மனித வாழ்வில் தன்னம்பிக்கை, துணிவு, ஆர்வம் முதயலியவை ஏற்படும். குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ஆகியவற்றில் பற்று, பாசம், உறவு, நட்பு முதலியவை பெருமளவு ஏற்படும். உருவாகும்.

நமது இந்துமதத்தின் பெயரால் எண்ணற்ற அரசியல் கட்சிகள், திருச்சபைகள், மடங்கள் கழகங்கள், இயக்கங்கள், சமய,



சமுதாயகலை இலக்கிய கட்சிகளும், சங்கங்களும் இருந்தும் அவைகளெல்லாம் நமது மெய்யான இந்து மத்தை, இந்து வேதத்தை, சித்தர் நெறியை பற்றி தெரியாதவைகளாகத்தான் தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்துக்களை வழி நடத்த முடியாதவை களாகத்தான் இருக்கின்றன.

எனவே ஒவ்வொரு இந்துவும், நமது இந்துமத வாழ்வில் குறிப்பிடப்பட்டுள்ள பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், சடங்கியல்கள், வாழ்வியல் நெறிகள், பூசைமுறைகள், விதிகள், முதலியவற்றை தெரிந்திருக்க வேண்டும் என்ற நேரடி முயற்சியில் நமது குருதேவர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அப்போது தான் இந்த திருநாட்டில் நிலவிவருகின்ற போலிச் சடங்கியல்கள், போலி பழக்க வழக்கங்கள், போலி சட்டதிட்டங்கள், மூட நம்பிக்கைகள், ஆபாச கற்பனைகள், சூழ்ச்சிகள், அன்னியர்களால் உருவாக்கி விடப்பட்டுள்ள ஏமாற்றுகள், சுரண்டல்கள், பிரிவினை, சாதிக் கொடுமைகள் தமிழின தாழ்ச்சி மற்றும் இகழ்ச்சிகள் ஆகியவற்றை அகற்ற முடியும், விரட்ட முடியும்.

எனவே இந்த மாபெரும் அருட்பணியில் ஒவ்வொரு இந்துவும் பெருமிதத்துடன் செயல்பட்டு இந்துக்கள் அனைவரையும் பதினெண் சித்தர் மடத்தில் உறுப்பினராக்க வேண்டும். ஏனெனில் பதினெண் சித்தர் மடம், பீடம் தான் இந்து மதத்தையும், இந்து வேதத்தையும் தோற்றுவித்தது. இந்த பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாக, பீடாதிபதியாக இருக்கின்ற " ஞானாச்சாரியார்கள்" தான் இந்துக்களின் " முழு முதற்தலைமை ஆச்சாறியக் குருபீடம்". இந்த முழுமுதற் தலைமை ஆச்சாறியக் குருபீடமாக இன்று வாழும் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார் அவர்களும், இவரது சீடர்களும் இன்றைக்கு ஓர் இமாலயப்

பணியாக ஒவ்வொரு இந்துவையும் தட்டி எழுப்பி, அவனுக்கு இந்து மத அறிவையும், வரலாறையும், இலக்கியங்களையும், இந்து மத அருளாளர்களின் சாதனைகளையும், போதனைகளையும் உணர்த்திட இவற்றிற்கு ஊடே, ஒவ்வொரு இந்துவின் ஊழ்வினை, ஆழ்வினை, விதி இவற்றிற்கேற்ப முற்பிறப்பு, மறுபிறப்பு, மற்றும் இப் பிறப்பின் மகிமை, இப்பிறப்பில் ஆன்மீகத்தை உணருவது எப்படி? இப்பிறப்பில் உயரிய நிலையை (பத்தி, சத்தி, செலுத்தி சித்தி நிலை பெற்று முத்தியை அடைய " வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்' என்ற நூலின் இரண்டாம் பாகம் வெளியிடப்படுகிறது.

## அணிந்துரை :-

சித்தர் பொன்னாக்கீசர்,

பெ. சுப்பையா B.E., பொது மேலாளர்,

முதுநிலை கோட்டப் பொறியாளர்

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்.

சகோதர சகோதரிகளுக்கு,

எமது வணக்கம்,

" வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்" என்ற தலைப்பிட்ட இந்நூல் அனைத்துதரப்பட்ட மக்களையும் கவரக்கூடிய ஒரு நூலாகும்! ஏனெனில் "எல்லோரும் சித்தராகலாம்" என்ற அழைப்பு வியக்கத்தக்க, அதே சமயம் விரும்பத்தக்க ஒன்று. இன்றைய கலியுகத்தில் இந்து மதத்தையும் அதன் பழமையையும் அதன் வலிமையையும் அறியவும்; சித்தர்கள் யார்? அவர்களுக்கு மூலமாக விளங்கும் மூலப் பதினெண்சித்தர்கள் யார்? இவர்களுக்கும் இந்து மதத்தின்



வலிமைக்கும் தொடர்பு என்ன? என்று அறிய இந்நூல் ஓர் சிறப்புக் கையேடு.

இந்து வேதத்தில், இந்து மதத்தில் உள்ள வாழ்வியல் கோட்பாடுகள், தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்று பகுத்து ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்ற பண்பாட்டை விளக்கும் நூலாக, இந்து மதத்தின் உண்மை வரலாற்றை எடுத்து இயம்புகிறது.

இந்நூல் இந்து வேத மத ஆண்டாக 43, 73, 098 வருட பாரம்பரியத் தொகுப்பாக சுருக்கி வரையப்பட்டு இருக்கின்றது. சித்தர்கள் எங்கெங்கு, எப்படியெப்படியெல்லாம் செயல்பட்டார்கள்?! கோயில்களையெல்லாம் உருவாக்கி அந்தக் கோயிலின் ஆகம விதிகளை உருவாக்கி, அக்கோயில்களை இந்து வேதக் காப்பகங்களாக, செயலகங்களாக, தெய்வீக மருத்துவ நிலையங்களாக உருவாக்கி செயல்பட்டிருக்கிறார்கள் என்ற கூற்று, எல்லோரையும் சித்தராக்கிட முனைகிறது.

கடவுள்கள் யார்? கடவுளுக்கும் சித்தர்களுக்கும் தொடர்பு என்ன? கடவுளையே உருவாக்கும் வல்லமை பெற்றவர்களாக சித்தர்கள் விளங்கியிருப்பது குறித்து இந்நூல் அருமையாக விளக்குகிறது. கண்கவர் சிற்பங்கள், விண்ணுயர்ந்த கோபுரங்கள் வடிவமைக்கும் விதத்தை சித்தர்கள் உருவாக்கி, இதோடு மட்டுமில்லாமல் கோயிலில் ஓதப்படும் தமிழ் மந்திரங்களை மக்களுக்கு வழங்கிட வழிகாட்டியாக விளங்கியிருக்கிறார்கள் என்ற கூற்றும்.

மனிதர்கள் தங்கள் வாழ்வின் பொற்காலம் பற்றி அறிய அவர்களுக்கு முன் அறிவிப்புக்களை, நடக்க இருப்பது பற்றி முன் கூட்டியே தெரிவிக்க ஐந்திரம் என்ற ஐந்து வகை கலைகளை உருவாக்கி உள்ளார்கள் சித்தர்கள் என்ற கூற்றும்

இவற்றிற்கெல்லாம் மேலாக இத்தகைய அரிய செயல்களைச் செய்யும் சித்தர்களாக உருவாக, மானிடரான நம்முடைய ஆள்வினை, ஊழ்வினை விதியின் அடிப்படையில் தரத்தையும், திறத்தையும் புகுத்தி ஞானத்தைத் தந்து சித்தர்களாக்கிட அரும் பெரும் பணியைச் செய்கிறது பதினெண் சித்தர் மடம் என்ற கூற்று எல்லோரையும் கவரக் கூடிய ஒன்று. ஏனெனில் இன்றைக்கு கடவுள் யார்? கடவுளுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? அவர் கருப்பா? சிவப்பா? என்ன சாப்பிடுவார்? குட்டையானவரா? உயரமானவரா? பருமனானவரா? என்று கேட்கும் இக்காலத்தில் " கட+உள்" உள்ளத்தைக் கடந்தவன் கடவுள் ஒரு மனிதனின் ஆன்மா முத்தி நிலை பெற்று அவன் கடவுளாகும் விதம் எப்படி? அக்கடவுளையோ அதாவது அந்த ஆன்மாவை முத்திநிலை பெறச் செய்யக் கூடிய சித்தராவது எப்படி? என்று விளக்கி உரைக்கிறது இந்நூல்.

" சித்தன் போக்கே சிவன் போக்கு" என்ற பழமொழி ஒன்று உண்டு. இந்தப் பழமொழியை விளங்கக் கூறும் வண்ணம் சித்தனின் பின்னால் கடவுள்களே வருகிறார்கள். அக்கடவுள்களை உருவாக்கக்கூடிய சித்தர்களை யாம் உருவாக்கித் தருகிறோம். " வாருங்கள் மானுடர்களே உங்களைச் சித்தராக்குகிறோம்" என்று அழைக்கும் ஓர் "மகா ஞானி" எல்லாம் வல்ல சித்தர் 'இராசயோகி'' சித்தர் கருவூறார் ''ஞானாச்சாரியாரின்'' இந்த அழைப்பு மெய்ஞானத்தின் உச்சநிலையை, இவரது ஆழ்ந்த முத்தி நிலையை பிரதிபலிக்கிறது. எனவே எல்லோரும் இந்நூலை வாங்கிப் படியுங்கள். படிப்பதோடு மட்டுமின்றி சித்தனாக பயிற்சி நிலையைக் பெற்று மாபெரும் சித்தராக வேண்டும் எனக்கூறி, பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, பீடாதிபதி சித்தர்



கருவூறார் வாழ்க எனக் கூறி எமது உரையை முடிக்கின்றேன்.

ஓம்

## முன்னுரை:-

1). பதினெண் சித்தர்கள் உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதற்காக அருளியது தான் "இந்து மதம்"எனப்படும் 'சீவ நெறி' இந்தச் சீவநெறி என்ற சொல்லே சிவநெறியாகத் திருத்தம் பெற்றது. இந்தச் 'சிவநெறியே' காலப் போக்கில் 'சைவநெறி' 'சைவ சித்தாந்தம்' என்றாயிற்று.

2). 'இளமுறியாக் கண்டம்' (நிலப் பகுதி முழுமையாக உறுதிப்படாமல் இருந்த கண்டம். அதாவது, புதை மணல் சதுப்பு நிலம் ...... முதலியன மிகுதியாக இருந்த கண்டம்) எனப்படும் முதல் நிலப்பரப்பில்; அனாதி சிவன்கள், ஆதி சிவன்கள் உருவாக்கியதுதான் சைவ நெறி, சைவ சித்தாந்தம். சிவநெறி, சீவ நெறி ........ எனப்படும் மூலமதம் "முதல் மதம்".

3). ஆதி சிவன்களின் செயல்பாடுகளால் அழகான, அமுதான,...... என்று (1359) ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது பொருள்களைக் குறிக்கும் "இந்து" என்ற சொல் உருவாயிற்று, இந்தச் சொல்லே உலக மதங்களின் கருவாக, குருவாக அடிப்படையாக அமைந்தது.

4). இளமுறியாக் கண்டம் படிப்படியாக மூன்று கடல்கோள்களால் சிதைந்து; இன்றுள்ள ஐந்து பெரும் கண்டங்கள் உருவாயின. இதே போல் பல மொழிகளும், பல மதங்களும், பல இனங்களும், பல்வேறு வகையான பண்பாடுகளும், நாகரீகங்களும் தோன்றின. இருந்த

போதிலும், உலகம் முழுவதும் உள்ள மொழிகளுக்கும், இனங்களுக்கும், பண்பாடுகளுக்கும், நாகரீகங்களுக்கும், மதங்களுக்கும் ஒற்றுமைகள் இருக்கின்றன. இந்த ஒற்றுமைகள்தான்; இளமுறியாக் கண்டமே! அனைத்துக்கும் தாயாக, கருவாக, குருவாக, இருக்கின்றது என்ற பேருண்மையை விளக்குகின்றன.

5). இவற்றை எண்ணிப் பார்த்துத்தான் இன்றைக்கு ''உலகச் சகோதரத் தத்துவம்'' 'உலக அமைதி' 'உலகச் சமாதானம்' 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு' ...... என்ற கொள்கைகளை நிறைவேற்றும் வல்லமை தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கும் தமிழரின் இலக்கியம்பண்பாடு நாகரீகம், முதலியவற்றிற்கும் தான் உண்டு. என்ற உண்மையை நான்குயுக நாயகம் அறிவிக்கிறார். ஆனால் தமிழ் மொழி மந்திரங்கள் ஓதப்படாததால் கோயில்களில் உள்ள கடவுள்களின் அருளாட்சி முழுமையற்று நிறைவற்றுப் போய் விட்டது. இதனால் தான் இன்று வாழும் பன்னிரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞால குரு சித்தர் கருவூறார் அனைத்து குறைபாடுகளை நீக்கிட, அருளாட்சி முன்னேற்றக் கழகம் ஒன்றைத் தோற்றுவித்துச் செயல்படுகிறார். இந்த அ.மு.க. வின் மூலம் தான் நமது மானுட வாழ்வில் இருக்கின்ற அருளுலக வெறுமைகளும், வறுமைகளும் அகற்றப்படப் போகின்றன. அதற்கு நாம் நமது மத வரலாற்றை ஆரம்ப காலத்திலிருந்து ஆராய்ச்சி செய்து செயல்பட்டிட வேண்டும். நமது செயல்களே வருங்காலத்தில் அருளாட்சியின் விழிச்சி நிலைகளையும் செழிச்சி நிலைகளையும் உயர்ச்சி பெற்றிடச் செய்யும்.



அதாவது கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் அனாதி சிவன்களும், ஆதி சிவன்களும் அருளிய தமிழ் மொழியும் தமிழர் வாழ்வியலுமான இந்து மதம் தான் மானுட வாழ்வை மறுமலர்ச்சி அடையச் செய்யும். ஆனால் இந்து மதம், 'இந்து' என்ற சொல் காலப்போக்கில் தோன்றிய பல ஞானிகளின் பெயர்களால் தோன்றிய மதங்களால் மறைந்து, மங்கிப் போயிற்று. இந்நிலை மாற தமிழ் மொழியிலுள்ள பொருளாழமிக்க 'இந்து' என்ற சொல்லால் தான் தமிழின ஒற்றுமை இந்தியாவிலுள்ள அனைத்து இனங்களின் ஒற்றுமை, உலக முழுதுமுள்ள உலக இனங்களின் ஒற்றுமை உருவாக்கிட முடியும்.

7. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் உலக நன்மைக்காகப் பதினெண் சித்தர்களால் உருவாக்கப்பட்ட இந்து மதம் மீண்டும் புத்துயிர்ப்புச் செய்யப்பட்டு; தமிழகத்திலும், இந்தியாவிலும், உலகிலும் அருளாட்சி அமைத்திடமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை எண்ணிப் பதினெண் சித்தர் மடமும், பீடமும் ஆற்றி வரும் பணிகளில் பங்கு பெறுங்கள்; அல்லது, உங்களுடைய மேலான ஆதரவுகளையும், உதவிகளையும் வழங்குங்கள்.

8. இந்த உலகில் உள்ள சிறிய, பெரிய நாடுகள் எல்லாம் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, மதப்பற்று, என்று; தங்கள் தங்களுடைய பண்பாட்டையும், நாகரீகத்தையும் பாதுகாத்துக் கொள்ளுகின்றன. ஆனால் இந்தியாவும், தமிழ்நாடும் மேற்படித் தனித்தன்மையைப் போற்றிப் பேணிப் பாதுகாக்கத் தயாராக இல்லை.

இத்துடன் மட்டுமின்றி இந்தியாவும், தமிழ்நாடும் தான், இம் மண்ணுக்குரிய பண்பாடு, நாகரீகம், மொழி, இனம், மதம்.... முதலியவற்றைக் காப்பாற்றத் தவறி விட்டன. இன்னும் பச்சையாகச் சொல்லப்போனால்; அரசியல் ஆதாயம் தேடித் தமிழக அரசியல்வாதிகளும்; இந்திய மத்திய அரசாங்கத்தில் பங்கு பெறும் அரசியல்வாதிகளும் மேற்கூறிய அனைத்தையும் நலிவுபடுத்தியும், இழிவு படுத்தியும், துரோகம் செய்தும் சுயநல அரசியல் வாதிகளாக வாழுகிறார்கள்.

இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இந்திய பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும், இன உணர்வுக்கும், மொழிப் பற்றுக்கும், மதத்துக்கும்... அடிப்படையான கருவான, குருவான... தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழ் நாகரீகத்துக்கும், தமிழர் மதமான இந்து மதத்துக்கும் (சீவ மதம் - சைவ மதம்) உரிய தனித்துவத்துக்கும், சிறப்புக்கும், ஆற்றலுக்கும், சிதைவு ஏற்படும்! சீரழிவு ஏற்படும்! அதனால் தமிழர்களின் உலக ஒற்றுமை, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, உலகச் சமத்துவம், உலகச் சகோதரத்துவம், உலக அன்பு, உலக அமைதி, உலகச் சமாதானம்.... முதலிய உயரிய குறிக் கோள்களுக்குத் தாயகமாக, விளங்கும் தமிழும், தமிழர் வாழ்வியலும் பெருமளவில் பாதிக்கப்படும். அதனால் தமிழர் மதமான சித்தர் நெறி என்னும் (சைவ நெறி) சீவ நெறி செயலிலக்க நேரிடும். எனவே, தமிழக அரசியலிலும், மெய்யான தமிழ் மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும், இனப்பற்றுக்குரிய பண்பாட்டுப் பிடிப்பும், நாகரீகப் பற்றும், ஆன்மீகப் பற்றும் காப்பாற்றப்படேயாக வேண்டும். இதற்காகப் போலியான அரசியல்வாதிகளையும்,



மதவாதிகளையும், கலைஞர்களையும் ஒதுக்கிட, மறுத்திட, வெறுத்திட, எதிர்த்திடத் தயாராக வேண்டும். அப்பொழுது தான், நமது தனித்தன்மைகளும், உலகைக் காத்திடவும் வல்லமை பெற்ற தமிழர்களின் சாதனைகளும் போதனைகளும் நிலையாகச் செயல்பட்டிடல் வேண்டும். அதற்குப் பதினெண் சித்தர்கள் அருளின், அரவணைப்பும் வழிகாட்டலும் தேவை!! தேவை!! தேவை!!

10. இன்றைக்குரிய சாதிப்பிரிவினைகளுக்குச் சித்தர்களின் வரலாறுகளும், வாழ்வியல்களும், சமுதாய, சமயச் சிந்தனைகளும் தான் உதவிட முடியும். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மூதுரை; பதினெண் சித்தர்கள் தோற்றுவித்திட்ட கோயில்களின் அருமை, பெருமையும் அரிய பயனும் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றன. எனவே தான் சித்தர்கள் கோயில் கட்டும் விதம், கோயில் புதுப்பிக்கும் நெறிமுறைகள், பூசை மொழி, பூசை விதி, திருநாள் கொண்டாடும் நெறிமுறை, கோயில் குடமுழுக்கு விழா.... என்றிப்படிப் பல நூல்கள் எழுதியருளியுள்ளார்கள்.

காலப்போக்கில், கோயிலில் மூலக் கருவறையில் எழுந்தருளியிருக்கும் கடவுள்களின் அருளையும், மானுடர், பெற்றுக் கொள்வதற்குரிய அரிய பூசை மொழிகள், பூசை விதிகள், வழிபாட்டின் நுட்பமான நெறிமுறைகள் எல்லாம், சிறிது சிறிதாக மறைக்கப்பட்டு விட்டன; மறக்கப்பட்டு விட்டன. அதனால் பொதுமக்களில் கணிசமானவர்கள் கோயிலுக்குப் போகும் பழக்க வழக்கங்களை ஒதுக்கிடவும், புறக்கணிக்கவும், மறுக்கவும்... ஆரம்பித்துவிட்டார்கள்.

12. பதினெண் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச்

சித்தர்களும் தோற்றுவித்த கோயில்களில் பெரும்பாலானவை பொதுமக்களால் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்படுவது...... குறையலாயிற்று. எனவே, கோயில் மூலக் கருவறையிலிருந்த தெய்வங்கள் எல்லாம் ஞானிகள், மகான்கள், இருடிகள், முனிவர்கள்... முதலியவர்களிடம் சென்று தங்கிச் செயல்படலாயினர். இதனால் தொன்மையான கோயில்கள், அருளிழந்து, இருளடைந்து, காட்சிப் பொருள்களாகி விட்டன. பத்தியாளர்களும் கூட, 'வீட்டிலேயே சாமி கும்பிட்டால் போதும்' என்ற முடிவை எடுக்க நேரிட்டது.

13. இவற்றின் விளைவாக ஆங்காங்கே ஒரு சில ஊர்களில் உள்ள கோயில்களில் கூட்டங்கள் நிறைந்து வழியலாயின. பல கோயில்களில் ஒரு வேளை பூசை நடப்பது கூட அரிதாகி விட்டது. கணிசமான அளவு கோயில்கள் பாழடைந்து பூசையே இல்லாமல் போய்விட்டன.

14. இந்நிலைக்குக் காரணம் என்ன? அதாவது, சில கோயில்களுக்கு மட்டும் உண்டியலில் பல நூறாயிரக் கணக்கில் வருமானம் இருக்கின்றது. அதே சமயம் பல கோயில்களில் திருநாள், திருவிழாக் காலங்களில் மட்டுமே சில நூறு ரூபாய்கள் வருமானம் இருக்கின்றன. ஏன் இந்த வேறுபாடு? எதற்காக இந்த வேறுபாடு?! ....... என்று சிந்தனை செய்திட வேண்டும். அப்பொழுது தான் நம் நாட்டில் உள்ள கோயில் கருவறைகளில் உள்ள குடும்ப ஆண்டவர்கள், குலதெய்வங்கள், ஊர்த் தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் எனப்படும் நான்கு வகைப்பட்ட அருளாட்சியினருக்கும், மக்களுக்கும் இடையில் மீண்டும் வளமான, வாளிப்பான, வலிமையான



தெளிவான நல்ல அறிமுகம், புரிமுகம். ஏற்பட்டிடும்.

15. இதற்காகத் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் பல்வேறு பெயர்களில் பல்வேறு, நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்தும், ஏற்கனவே ஆதிசிவனார் தோற்றுவித்த ''அருளாட்சிக் கழகத்தை'' மையமாக வைத்தும் செயல்படுகிறார்கள்.

16). அதாவது ஆதிசிவனார் இம் மண்ணுலகில் அருள்நெறி பிழைக்கவும், தழைக்கவும், அருளாட்சிக் கழகத்தைப் படைத்தார்கள். இக்கழகத்தில் இடம் பெறுபவர்கள் பின்வருமாறு :-

(i). எட்டு இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்று முப்பத்தாறு வகைக் கடவுள்கள்

(8, 84, 736)

(ii). முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்கள்

(33, 000, 00, 00, 000)

(iii). நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகள்

(48, 000, 00, 00, 000)

(iv). ஆயிரங்கோடி தேவதைகள்

( 1, 000, 00, 00, 000)

(v). தொண்ணூற்றாறாயிரங் கோடி கணங்கள்

( 96, 000, 00, 00, 000)

(vi). நூற்றெட்டாயிரங் கோடி முனிவர்கள்

( 108, 000, 00, 00, 000)

என்று ஆறுவகைப்பட்ட அருளுலகத்தவர்களைப் பட்டியலிட்டு வழங்கியுள்ளார்.

இப்படிப்பட்ட அருளுலகத்தவர்களை அண்ட பேரண்டங்களிலிருந்து கொண்டு வந்து குமரிக் கண்டம் என்ற இளமுறியாக் கண்டத்தில் அருளாட்சிக் கழகத்தை நிறுவினர். இவற்றிற்குரிய அருளாட்சி அலுவலக நிலையங்களாக,

1). 108 வகை திருப்பதிகள்

2). 243 வகை சத்தி பீடங்கள்

3). 1008 வகை சிவாலயங்கள்

4). 48 வகை கருவறைகள்

5). 48 வகைப்பட்ட வெட்ட வெளிக் கருவறைகள்

6). 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள்

7). 48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள்

என்ற ஏழு வகைப்பட்ட அலுவலகங்களை உண்டாக்கி அருளாட்சிக் கழகத்தின் ஆட்சியை வரை முறைப் படுத்திட்டார்.

18. இப்படி இந்த உலகில் முதன் முதலில் தோன்றிய பெருநிலப்பரப்பில் சித்தர்களின் தாய்மொழியும் அண்ட பேரண்டங்களை இணைக்கும் மொழியும் இம்மண்ணுலகின் அருளாட்சி மொழியுமாகிய அமுதச் செந்தமிழ் மொழியில் பூசைகளைப் பற்றிய அனைத்து வகையான தத்துவங்களையும், தத்துவ நெறி முறைகளையும் அனுபவப்பூர்வமான சித்தாந்த செயல்



நடைமுறைகளையும் உண்டாக்கினார்.

19. இதனால் தான் தமிழ் மொழி இந்த உலகில் உள்ள எல்லா மொழிகளையும் ஈன்றெடுத்திட்ட தாய் மொழியாகும். அதாவது அனாதி சிவனும், ஆதி சிவனும் இந்த உலகில் உள்ள அனைத்து வகையான மதங்களுக்கும் உரிய அருளுலகத்தவர்களையும், பூசை விதிக்குரிய பூசை மொழிகளையும் தமிழ் மொழியில், வழங்கி உள்ளனர். காயந்திரி மந்திரங்கள்; உடலைப் பக்குவப்படுத்துவதற்கு என்று அண்டபேரண்டம் அனைத்திலும் உள்ள அருளுலகத்தவர்களை வரவழைத்து பூசை செய்வதற்கு உரிய மந்திரம் ஆகும்.

குறிப்பாக உலகியலில் உள்ள மனிதர்களில் யார் யாருக்கு ஊழ்வினையாலும், விதியினாலும், பயிற்சி முயற்சியாலும் ...... அருளுலக யோகத்தாலும், பத்தியாலும், சத்தியாலும் அருளாளராகத் தேர்ச்சி பெறக் கூடியவர்களை அவரவர் விருப்பப்படி காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் எனும் ஐந்து வகைப்பட்ட காயந்திரிகளை ஓதுவிக்க அருளாணை வழங்கினார்கள்.

20. இப்படி ஐந்து வகைப்பட்ட பூசை முறைகளை அருட்கொடை வள்ளலாகிய பதினெண் சித்தர் பீடாதிபதியும் மடாதிபதியுமாகிய ஆதிசிவனார் அவர்கள் நேரடியாகவே குறிப்பிட்ட பூசை மொழிகளையும், பூசை விதிகளையும், பூசைக்குரிய தத்துவங்களையும், பூசைக்குரிய நடைமுறைச் சித்தாந்தங்களையும் மறைகளாக பாரம் பரியமாக பாதுகாத்திடும் படியான ஏற்பாடுகளை

செய்து வைத்துள்ளார். சான்றாக காயந்திரி மந்தரம், மந்திரம், மந்திறம் என்ற மூன்று வகைப்பட்ட பூசை மொழிகளைத் தவிர காயந்திரி மாந்தர, மாந்தரீகம் என்ற இரண்டையும் பத்திநிலை, சக்திநிலை, சித்தி நிலை பெற்றுச் சித்தராகிவிடும் நிலை பெற்றவர்கள் மட்டுமே தான் இந்தக் காயந்திரி மாந்தர மாந்தரீகங்களை பயன்படுத்தலாம் என்ற விதியை வகுத்துள்ளார்.

21). இதே போல் கருவாக்கு கரு வாக்கியம், கருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், திருவாக்கு திரு வாக்கியம், திரு வாசகம், தருவாக்கு, தரு வாக்கியம், தருவாசகம், அருள் வாக்கு, அருள் வாக்கியம், அருள் வாசகம், மருள் வாக்கு, மருள் வாக்கியம், மருள்வாசகம் எனும் பதினெட்டுக்களையும்; அத்தரம், அத்திரம், அத்திறம், சாத்தரம், சாத்திரம், சாத்திறம், சூத்தரம், சூத்திரம், சூத்திறம், வேத்தரம், வேத்திரம், வேத்திறம், நேத்தரம், நேத்திரம், நேத்திறம், தோத்தரம், தோத்திரம், தோத்திறம் எனும் பதினெட்டுக்களையும் குறிப்பிட்ட முயற்சி, பயிற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி, உடையவர்கள் மட்டும் தான் இவற்றை கற்கலாம் என்ற விதி செய்யப்பட்டு இருக்கிறது.

22). இதைப் போலவே குரு பத்தியில் சிறந்து விளங்கி குருவின் நம்பிக்கைக்கும், அன்புக்கும், ஆதரவிற்கும், உள்ளாகி குருவழி வாரிசுகளாக மாறுகிறவர்கள் மட்டுமே கற்பதற்கு என்று நேமம், இணை நேமம், துணை நேமம், நியமம், இணை நியமம், துணை நியமம், நிடதம், இணை திடதம், துணை நிடதம், நீதி, இணைநீதி, துணைநீதி நிட்டை இணைநிட்டை, துணை நிட்டை, விதி, இணை விதி, துணை



விதி எனும் பதினெட்டுக்களையும் உரிய பக்குவங்களைப் பெற்றவர்கள் மட்டுமே ஆதிஉணரலாம் என்ற சட்ட திட்ட கட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளனர் சித்தர்கள்.

23 இப்படி சித்தர்கள் தங்களுடைய ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், எனும் ஐந்தினையும் உலக மக்கள் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பலபகுப்புக்களாக, தங்களுடைய சாதனைகளை வெளியிட்டு உள்ளார்கள். இப்படி அரும்பாடுபட்டு சித்தர்கள் தங்களுடைய சாதனைகள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக மானுடரின் சிந்தைத் தெளிவையும், நெஞ்சுரத்தையும், உணர்வுக் கட்டுப்பாட்டினையும் பெற்றுள்ளவர்களையே தங்களுடைய மாணாக்கராக தயாரிக்கிறார்கள். இவர்கள் மூலம் தங்கள் செயல் நிலைகளை செயல்படுத்துகிறார்கள்.

24). இவர்களுக்கெல்லாம் மூலாதாரமாகச் செயல்படும் பதினெண் சித்தர்கள் 48 வகைச் சித்தர்களுக்கும் மூலாதாரமாக விளங்குகிறார்கள். இப் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தலைமைக் குருபீடமாக பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற காலங்களில் முழுமையாகச் செயல்படுகிறார்கள். இதற்காக பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்கள் தங்களின் காலங்களில், அருளூறு அமுதத் தமிழில் அண்ட பேரண்டங்கள் அனைத்திலும், இருக்கின்ற இந்து வேதாந்தம், இந்து சித்தாந்தம், இரண்டும் கலந்த இந்து மதம், முதலியவைகளை புதுப்பித்து மக்களுக்கு பயன்படும்படி செய்கிறார்கள்! இதற்காக, பதினெண் சித்தர் மடம், பீடம், இந்து மறுமலர்ச்சி

இயக்கம், இந்து வேத முன்னேற்றக் கழகம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் என்ற ஐந்தையும் தோற்றுவித்துச் செயல்படுகிறார்கள்.

25). இப்படிப்பட்ட ஐந்து வகையான நிறுவன நிர்வாகங்களால் அருளாட்சி அமைக்கிறார்கள். இந்த அருளாட்சி, தனிமனித அருளாட்சி, குடும்ப அருளாட்சி, சமுதாய அருளாட்சி, நாட்டு அருளாட்சி என்ற நான்கு நிலைகளில் செயல்பாடுகளை நிகழ்த்துகிறார்கள். இந்த அருளாட்சிகளை ஒழுங்கு படுத்துவதற்காக அருளாட்சிக் கழகம் என்ற ஒன்றினை உருவாக்குகிறார்கள். இதனை முழுமுதல் தலைவரான ஆதிசிவனார் வழங்கினார். அந்தத் தலைமைக்கு வாரிசாக முருகப் பெருமான் தோன்றிட்டார். வாழையடி வாழையென வாரிசுகள் தோன்றாததால் சிவபெருமானே "அருளாட்சி முன்னேற்றக் கழகம்" என்ற ஒன்றைத் துவக்கி சட்டதிட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தி; மூலப் பதினெண் சித்தர்களின் ஒருவரான, சித்தர் கருவூறாரை பதினெண் சித்தர் பீடாதிபதிகளாக, மடாதிபதிகளாக ஆக்கினார். அதன்படியே அருளாட்சி கழகத்தின் வாயிலாக இன்று வாழும் சித்தர் கருவூறார் ஞானாச்சாரியார் 12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி அருளாட்சி முன்னேற்றத்திற்காக செயல்படுகிறார். எனவே தான் இன்றைய சூழ்நிலையில் பதினெண் சித்தர்களின் அறிவுரைகளையும், அருளுரைகளையும் இவ்விரண்டின் சாதனைகளையும், அச்சாதனைகளால் விளைந்தனவற்றை போதனைகளாகவும் வழங்குகின்றார்.

26). சித்தர்களுடைய சாதனைகளும், போதனைகளும், பகுத்தறிவுப் போக்கில் விஞ்ஞானச் சூழ்நிலையில் தான் வழங்கப் பட்டிருக்கின்றன. எனவே தான் பதினெண் சித்தர்களுடைய வேதம், வேதாந்தம், சித்தம், சித்தாந்தம் எனப்படுவன. அறிவியல் சாதனைகளாகவே ஏற்றுக் கொள்ளத்த தக்கவை. ஒரு சில சித்தர்களின் வாக்குகளும், வாசகங்களும் நாத்திகத்தை வளர்ப்பன போன்று தெரியும். ஆனால் அவற்றை நுட்பமாக நுணுக்கமாக ஆராய்ந்தால் தான் அவைகளெல்லாம் ஆத்திகக் கருத்துக்களே என்பது புரியும். மேலும் சித்தர்கள் " வாருங்கள் மானிடரே உங்களை கடவுளாக்குகிறோம்" என்ற அறிவிப்பை அழைப்பாக விடுக்கிறார்கள்.

27). சித்தர்களின் அறிவிப்பு அழைப்பு மெய்யானவை என்பதற்கேற்ப ஆதியில் அண்ட பேரண்டங்களிலிருந்து இம் மண்ணுலகிற்கு வந்த ஆதிசிவன் தமது அருட்கொடையாக மனிதர்களைக் கடவுளாக்கும் பூசை மொழியை அருளியுள்ளார்

1. கனல் காற்றாகிப் பனியாகிப் புனலாயுருகிக்
2. கல்லாய் மண்ணாய் மணலாய்ச் சேராகிப்
3. புல்லாய்ப் பூடாய்ச் செடிகொடியாய் மரமாகிப்
4. புழுவாய் பூச்சியாய் விலங்காய் பறவையாகி;
5. மனிதராய் இருடியாய் முனிவராய்ப்பட்டவராகி
6. அமராராய் ஆண்டவராய்த் தெய்வமாய்த் தேவராகி
7. இறையாய் உருத்திரராய் எல்லாவாய் ஐயீசுவரியாய்க்
8. கருத்தும் காலமும் கடந்த கடவுளாகித்
9. திருத்தம் வழங்கு தனிப் பெரும் பல்பொருளாகி

10. வானாகி விண்ணாகி ஆகாயமாகிக் ககனமாய்;

11. விசும்பாய் பரவெளியாய் பால்வெளியாய் நிறைந்து

12. பிண்டமாய், அண்டமாய், பேரண்டமாய், அண்ட பேரண்டமாகி;

13. அருவாய், அருவுருவாய், உருவ அருவாய், உருவாகித்

14. திசைகள் நான்காய், எட்டாய்ப் பதினாறாகி

15. முப்பத்திரண்டாய், அறுபத்து நான்காய் விளங்கிடும் தத்துவமே!

16. கணக்கற்ற கோடிக் கடவுளராக வாழ்ந்தும்

17. கண்படைத்த மனிதரால் காணமுடியாத நிலையிலே

18. மெய்ப்பத்தரைக் காக்கும் நிறைமனத்தீரே!

19. வாய்மையாகத் தூய பத்தி செய்பவர்க்கே உய்வினைச்

20. சத்தியாக்கி சித்தியாக்கி முத்தியாக்கிச் சித்தாகிடும்

21. கோலங்கள் கோடி பல கொண்டருளு கடவுளரே!

22. எல்லோரும் எளிதில் எய்திட வாழும் எண்ணற்றோரே!

23. ஏதாவதொரு வழிபாட்டால் எப்படியும் உங்களில்

24. தோதாகச் சிலராவது கிடைத்திடுவீர் நம்புகிறோம்;

25. மனிதரோடு மனிதராய்த் தொண்டாற்றும் புனிதீர்!

26. தொழுகிறோம், வழிபடுகிறோம், வணங்குகிறோம், கும்பிடுகிறோம்;



27. எங்களையும் கடவுளாக்கிக் காத்து அருளுக!

ஆ ஓ! ஈ ஓ! ஊ ஓ! ஏ ஓ! ஐ ஓ! ஃ ஓ!
க ஓ! ச ஓ! ட ஓ! த ஓ! ப ஓ! ற ஓ!
ங ஓ! ஞ ஓ! ண ஓ! ந ஓ! ம ஓ! ன ஓ!
ய ஓ! ர ஓ! ல ஓ! வ ஓ! ழ ஓ! ள ஓ!
அ ஓ! இ ஓ! உ ஓ! எ ஓ! ஒ ஓ! ஔ ஓ!
அம் ஆம்! இம் ஈம்! உம் ஊம்!
எம் ஐம் ஐம்! ஓம் ஓம்!
ஔம் ஔம் ஔம் ! ஔம் ஔம்!
ஃ ம் ஃம் ! ஃ ம் ஃம் ! ஃ ம் ஃம் !

28. சித்தர்கள் மானுடர், மீது அளப்பரிய அன்பையும், இரக்கத்தையும், காக்கும் விருப்பத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே தான் மனிதர்களை அவரவர் நெஞ்சத்திற்கும், சிந்தைக்கும் ஏற்ப பல்வேறு பிரிவுகளாக பிரித்து அவரவர் தரத்திற்கும் திறத்திற்கும், ஏற்ப அருளையும் அருட்கலைகளையும் அருளி காப்பாற்றுகிறார்கள். இதைப்பற்றி எண்ணிப் பார்க்கத் தெரியாத அப்பாவிகளே மிகுதியாக வாழுகிறார்கள் இருப்பினும் சித்தர்கள் தக்காரைத் தேர்ந்தெடுத்து அக்கறையோடு அவர்கள் மூலம் மானுடர்களுக்கு பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவை கிடைக்கும்வண்ணம் செய்கிறார்கள்.

29. அருட்சத்தியை தவறாக பயன் படுத்தக்

கூடியவர்கள் மந்திரவாதிகளே ஆவார்கள்! இம்மந்திர வாதிகள், சித்தர்களின் பூசை முறைளை பயன்படுத்தி சாதாரண மக்களனைவருக்கும் தொல்லைகளையும், தோல்விகளையும், இழப்புகளையும், துன்பங்களையும் , துயரங்களையும், நோய் நொடிகளையும், உண்டாகும்படி செய்து அருளுலகுக்கு அழிவுகளையும், இழிவு களையும் ஆறாத பழிகளையும் உண்டாக்கு கிறார்கள்.

30). மந்திரவாதிகளின் இந்த ஈவு இரக்கமற்ற கொடிய செயல்களால் அருளுலக, பத்தி யாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் அருள் வழங்குவதைக் கூட மக்கள் தவறாக நினைத்து அருளாளர்களை வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும் இழித்து பழித்து பேசவும் அதிக அளவில் வளர்ந்து விட்டனர். அதாவது, யாரை எடுத்தாலும், போலிசாமியார், மந்திரவாதி என்று கேலி செய்வதும், ஏளனம் செய்வதும் அதிகமாகி விட்டன. இதனர் நல்ல அருளாளர்கள் சிறந்த பத்தியாளர்கள் முதலியோர் அன்பு வழியில், அற வழியில் நேர்மையான வழியில் நேர்வழியில், மக்களோடு தொடர்பு கொண்டு அருள் நெறியை பரப்ப முடியாமல் போகிறது. மேலும் ஒரு சில சாமியார்கள் துறவி வேடத்தில் உலாவி பல்வேறு குற்றங்களைச் செய்து விடுகிறார்கள. இதற்காக எல்லா சாமியார்களையும், துறவிகளையும் மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இவற்றையெல்லாம் அகற்றி அருளாளர்களை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் நற்காலம் உருவாக வேண்டும். அதுவே மனித வாழ்வின் பொற்காலம். சித்தர்கள் மனித



வாழ்வுக்கு தேவையான முன் அறிவிப்புகளை வழங்கிடும் பணியை தெளிவாக ஐந்திரம் என்ற ஐந்து வகைப்படட கலைகளாக அருளியுள்ளார்கள். அவை 1. பிறப்பியல்(சாதகம்) 2. வரியியல் (கைரேகை) 3. பெயரியல் (பேர் ராசி) 4. அங்கவியல்( உறுப்பிலக்கணம்) 5. மனையியல் (கட்டிடக் கலையியல் சாத்திரம்) இவைகளே ஐந்து வகையாகும். இதே போல் அருளுலகத்தவர்களிடமிருந்து அருளைப் பெறுவதற்கு ஐந்தீ வேட்டல், முத்தீஓம்பலுடன் எண்வகை பூசைவிதிகளை, பூசை மொழிகளை, அருளி உள்ளார்கள்.

31). இப்படி ஐந்தீ வேட்டல் என்பதற்கு ஐந்தீ வேட்டல் எனும் பூசை விதிகள் 1. ஓகம் செய்தல் 2. ஓமம் செய்தல் 3. யாகம் செய்தல் 4. யக்ஞம் செய்தல் 5. வேள்வி செய்தல் என்று ஐந்து வகைப்பட்ட கலைகளாக அருளி உள்ளார்கள். முத்தி ஓம்பல் என்பதற்கு 1. சூரியனை வழிபடுதல் (கந்தழி நிலை) 2. திங்களை (சந்திரனை) வழிபடுதல் 3. விண்மீன்களை வழிபடுதல் (கொடி நிலை) மூன்று வகைப்பட்ட கலைகளை அருளி உள்ளார்கள்.

32). இப்படி இயற்கையான பொருள்களை வழிபடுவதற்குரிய பூசை விதிகளையும், பூசை மொழிகளையும் அருளி உள்ளார்கள் பதினெண் சித்தர்கள். இப்படி உலகியலாக எளிமையான முறையில் பதினெண் சித்தர்கள் அருளியுள்ள, இந்து வேத நெறிமுறைகள் சித்தர் நெறியான சீவ நெறி முறைகள், சைவ சமய நெறி முறைகள், எல்லோராலும் முறையாக ஓதி நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது. அப்போது

தான் அவற்றின் மூலம் அரிய, பெரிய சாதனைகளைச் சாதித்து நன்மைகளை அடைய முடியும். இதற்காகவே சித்தர்கள் எனப்படும் எல்லோருமே அருள் யோகமுடைய மக்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அருளாளர்களாக்கி, மக்களுக்குத் தொண்டு செய்யச் சொல்லுகிறார்கள்.

33). நம் நாட்டில் கண்கவர் சிற்பங்களோடு விண்ணுயர்ந்த கோபுரங்களையும் உடைய கோயில்கள் தாராளமாக ஏராளமான இடங்களில் இருக்கின்றன. இவைகளைக் கட்டிய சித்தர்கள் இக்கோவில்களில் பூசை செய்யும் குருக்கல்கள், குருமார்கள், அருட் சினையாளர்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள் ஓதுவார்கள், மந்திரிக்கும் பூசாரிகள், பிறப்பியல் சாத்திரியார்கள், வரியியல் சாத்திரியார்கள், அங்கவியல் சாத்திரியார்கள், பெயரியல் சாத்தியார்கள் மனையியல் சாத்திரியார்கள், பல்வேறு வகையான இசைக் கருவியை இயக்கும் பல்லியத்தார்கள், நெடு வங்கியத்தார்கள் இசைவாணர்கள்.... என்று வகை வகையான அருளாளர்கள், அருளாளிகள், அருளொடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் என்று வகை வகையான கலைஞர்கள் கோவில்களில் பணிபுரியும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள்! இப்படிக் கோயில்களில் அருளை மருந்தாகவும், விருந்தாகவும், வழங்கக் கூடிய கலைஞர்கள், சித்தர்களால் உருவாக்கப்பட்டு வாழையடி வாழையாக அருட்பணி செய்யும்படி செய்திட்டார்கள் சித்தர்கள். இதனால் தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற மூதுரையும் பிறந்தது.



34) அதாவது கோயிலை, சித்தர்களின் செயலகங்களாக, அருளாட்சி நிறுவனங்களாக, பண்பாட்டு பெட்டகங்களாக, இந்து மதச் செயலகங்களாக நிறுவன நிர்வாக அலுவலகங்களாக செயல்படும்படி செய்தனர் பதினெண் சித்தர்கள். இம்மட்டுமின்றி இந்து மத வரலாற்றுச் சிற்பங்களாலும், ஓவியங்களாலும், இந்து மதக் கருவூலங்களாகவும், கண்வழிக் கல்வி வழங்கும் காட்சியகங்களாகவும் சித்தர் மருத்துவச் சாலைகளாகவவும், சித்தர் கல்விச் சாலைகளாகவும் சேவலோன் கலைப் பயிற்சிச் சாலைகளாகவும் நாட்டிய கவின்கலைச் சாலைகளாகவும், கோயில்கள் பயன்பட்டிட்டன. இவற்றிற்கும் மேலாக கோயில்கள், ஊர் மக்களின் ஆவணக் களரியாகவும், நீதி வழங்கும் மன்றங்களாகவும், கவி அரங்கமாகவும், கலை அரங்கமாகவும், ஊராட்சி மன்றங்களாகவும், அரசாங்க அலுவலகங்களாகவும், செயல்படும் படி செய்தார்கள் சித்தர்கள்.

35). கோயில்கள் பற்றிய பேருண்மைகளை நிறைவாகவும், முறையாகவும் ஆராய்ந்து புரிந்து கொள்ளுபவர்கள் தாங்களும், உடனடியாக சித்தர்களாக மாறவேண்டும் என்ற விருப்பத்திற்கு உள்ளாவார்கள். எனவே தான் 'வாருங்கள் எல்லோரும் சித்தராகலாம்' என்ற தலைப்பில் சில பகுதிகளாக எழுதப்பட்ட பெரிய நூல்களிலிருந்து எல்லாரும் படித்தறிய வேண்டும் என்பதற்காக சிறுசிறு பகுதிகளை நூல்களாக்கி தொடர்ச்சியாக வெளியிட முன்வந்துள்ளது பதினெண் சித்தர்மடம். இம் மடத்தின் மடாதிபதியாகவும், பொருளுலகின் பீடாதிபதியாகவும் செயல்படுகின்றார்

ஞானாச்சாரியார் சித்தர் கருவூரர். அதாவது அருளுலகின் மடாதிபதியாகவும், பொருளுலகின் பீடாதிபதியாகவும் செயல்படும் 'ஞானாச்சாரியார்' சித்தர் கருவூரர் இந்த 'வாருங்கள் எல்லாரும் சித்தராகலாம்' என்ற நூலின் இரண்டாம் பாகத்தை வெளியிடுகிறார்.

ஓம்

## சித்தர்கள் மாநாடு ஏன் ?!

1). சித்தர்களின் கொள்கையையும் குறிக்கோள் களையும் உலகம் முழுவதும் பரப்பிட முதல்நிலை முயற்சியாகச் சித்தர்களின் மாநாடு கூட்டப்படுகிறது.

2). உலகில் சாதி, இனமொழி, மதச்சண்டை முதலியவற்றால் சச்சரவுகள் வளர்ந்து பெரிய பெரிய வடிவங்களைப் பெற்று வருகின்றன. இவற்றை மிகமிக விரைவில் தடுத்து நிறுத்தி ; முழுமையாக அகற்றியாகிட வேண்டும். இல்லாவிட்டால் பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் பதினெண் சித்தர் மடாதி பதிகளும், நாற்பத்தெட்டுவகைச் சித்தர்களும் அயராது உழைத்து உருவாக்கிய மனித தத்துவம் அல்லது மனிதம் எனப்படும் அன்பு, பற்று, பாசம், குடும்ப பற்று, மனப் பொறுமை, அடக்கம், தோழமை, நட்பு ...... முதலிய இனிய பண்புகள் நலிந்து, மெலிந்து அழிய நேரிட்டிடும். அதன் பிறகு மானுடர்கள் ஒருவரையொருவர் தாக்கியும், கொலைகள் செய்தும், கொள்ளையடித்தும் வாழும் காட்டுமிராண்டி வாழ்க்கையே மீண்டும் உருவாகிவிடும் ஆபத்தே விளையும்.

3). அதாவது உணவு, உடை, ஆயுதங்ள் முதலியவை விஞ்ஞானத்தால் மிகமிக உயர்ந்து வளர்ந்து விட்டன. ஆனால், மனிதர்களுக்கிடையில் மொழி, இனம், நாடு, மதம்,



சாதி ...... என்பனவற்றின் பெயரால் சிறிய பெரிய சண்டை சச்சரவுகளால் சிறிய பெரிய போர்களும் ஏற்பட்டு அழிவையே தரும். அதுவும் விஞ்ஞான ஆயுதங்கள் மிகப்பெரிய பேரழிவை உருவாக்கக் கூடியவை ஆகும்.

4). எனவே தான், தனிமனிதர்கள் திருந்த ஆன்மிக அறிவும் மிகப்பெரிய செய்முறைப் பயிற்சிகளும் அதிகமாகிட வேண்டும். மெய்ஞ்ஞான அமைதி, நிம்மதி, நிறைவு ............ முதலியவை தனி மனிதர் வாழ்வில் வளமாக வளர்ந்தோங்கிட வேண்டும். அதனடிப்படையில் தான், சாதி, மத, மொழி, இன நாட்டு வெறியுணர்வுகள் தணிந்து, நெறி முறைப்பட்டிடும் அப்பொழுது படிப்படியாக மனிதநேயம், மனிதத் தோழமை, மனித நட்பு, மனித ஒற்றுமை மனித நிம்மதி, மனித நிறைவு ..... முதலியன முளைவிட்டுக் கிளைத்துச் செழித்தோங்கிவிடும்.

5). அதற்காகத்தான் சித்தர்கள் " சித்தர் நெறி" 'வேதத் தத்துவம்' “சைவசித்தாந்தம்” என்பவைகளைச் செந்தமிழில் படைத்து; அனைத்துக்கும் ''இந்துமதம்'' என்று பெயரிட்டனர். ''இந்துமாக்கடல் போன்றது இந்து மதம்'' என்று கூறியுள்ளார்கள். மேலும் எல்லாக் கடல் கரைகளிலும் இந்து மதமே வாழும்; இந்து மத நாடான இந்தியா உலகம் முழுவதும் இந்து மதம் மூலமாக உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் ............ என்று பலவாறு இந்துமதத்துக்கும் தமிழர்க்கும் உள்ள உறவு பற்றி நான்கு வேதங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

6). அண்ட பேரண்டங்களிலிருந்து வந்திட்ட சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும் ' அண்ட பேரண்ட அருளாட்சி மொழியுமான தெய்வீகச் செந்தமிழ்

மொழியுமான தமிழ் மொழியில்: இந்து வேத நூல்களை அருளினார்கள். இவர்கள், "இளமுறியாக் கண்டம்" என்ற முதல் கண்டத்தில் ஓடிய ஆறுகளிலேயே பெரியதும், மிக நீண்டதுமான "குமரி ஆற்றின் பெயரால் குமரிக்கண்டம் என்னும் பெயரில் இளமுறியாக் கண்டத்தைக் குறிக்கிறார்கள்.

இந்தச் சிந்தர்களே, அண்டபேரண்டம், முழுதும் பரவியுள்ள இந்து மதத்தை; இளமுறியாக் கண்டத்தில் பரப்பினார்கள். அப்படி இந்து மதம் பரவிய பகுதிகளையெல்லாம் "இந்தியா" என்று பெயரிட்டனர் இது பற்றி இருக்கு வேதக் குறிப்புகளைச் சுருக்கி எழுத ஆரம்பித்திட்ட 'பஃறுளியாற்றங்கரைக் கருவூறார்' "எவ்வளவு வேகமாக, விரைவாக இந்து மதத்தைப் பரப்பினாலும்; இந்து மதம் யாண்டும் பரவியுள்ள "இந்தியாக்கள்; சிறுசிறு நாடுகளாகக் குமரிக் கண்டத்தில் ஆங்காங்கே தனித்தனி நாடு களாகத்தான் இருக்கின்றன. என்றைக்கு இந்த குமரிக்கண்டம் முழுதும் இந்து மதம் பரவியுள்ள இந்தியாவாக மாறுமோ தெரியவில்லை. இதற்காக முத்தமிழ்ச் சங்கங்களை ஊர்தோறும், தோற்றுவித்துத் தமிழ்மொழி செழித்தோங்கச் செய்ய வேண்டும். "தமிழே இந்து மதம்" "இந்து மதமே தமிழ் மொழி" என்ற கருத்தை அனைத்து மக்களும் புரிந்து கொண்டிட்டால் தான், குமரிக் கண்டம் "இந்தியா" என்ற பெயரைப் பெறும். அதுவரை "இளமுறியாக் கண்டம் எனப்படும்" குமரிக் கண்டத்தில் சுற்றியுள்ள மாக்கடல் வெளி பரப்பு "இந்துமாக் கடல்" என்றே அழைக்கப்படட்டும். இந்த இளமுறியாக் கண்டத்தில்



பல்வேறு மொழியினரும் அம்மொழி வழியாக வாழும் மக்களும் தமிழ்மொழி கற்றிட்டால் தமிழர்கள் என்ற இனத்தில் சேர்ந்து விடுகிறார்கள். இந்தத் தமிழர்கள், தங்களின் முன்னோர்களான சித்தர்கள் அருளிய இந்து மதத்தை ஏற்றுக் கொண்டு இந்துக்களாக வாழும் போது தமிழர்கள் (இந்துக்கள் = தமிழர்கள்) என்ற இனத்தவர்களாக மாறுகிறார்கள் என்று கூறுகிறார். இவற்றை இவரே மிகத் தெளிவாக தமது 'குருபாரம்பரியம்' (இந்து மத வரலாறு = தமிழர் மத வரலாறு) 'இலக்கிய பாரம்பரியம்' (இந்து மத இலக்கிய வரலாறு = தமிழ் மொழியின் மொழி வரலாறும் இலக்கிய இலக்கண வரலாறும்) 'அரச பாரம்பரியம்' (தமிழின சமுதாய வரலாறும் அரசியல் வரலாறும் ஆகும்) எனும் மூன்று தொடர் நூல்களிலும் விளக்கிக் கூறுகிறார்.

8). இம்மண்ணுலகுக்கு வந்திட்ட சித்தர்களின் தலைவர் ஆதிசிவனார் ஆவார். இவரே பதினெண்சித்தர் பீடத்துக்கும் மடத்துக்கும் முதல் பீடாதிபதியாக முதல் மடாதிபதியாக விளங்குகிறார். இவர் தான் கடலுள் மறைந்த 'குமரிக் கண்டம்' எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் தமிழுக்காக மருதமரக் காடுகள் மிகுந்த பகுதியில் 'மருதை மாநகர்' என்றோர் நகரை உருவாக்கினார். அந்த மருதை மாநகரில் தமிழ் கற்கவும், தமிழை ஆராய்ச்சி செய்யவும்; தமிழ் நூல்களை அரங்கேற்றம் செய்யவும்... தமிழ் மொழியைப் பரப்பவும் வளர்க்கவும் ஏற்பாடு செய்தார்.

9. முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியும், மடாதிபதியுமான ஆதிசிவன் குமரிக் கண்டத்தின் தென்பகுதியில் இருந்திட்ட தென் இமயமலையில் உற்பத்தியான 'தென் இந்து' 'தென்கங்கை' 'குமரியாறு' என்ற மூன்றும் இணைந்த இடத்தில் இந்து வேதத்துக்காக 'அருட்பா' என்ற நகரையும்

இந்து மதத்திற்காக 'மோகஞ்சிதறாத நகர்' என்ற நகரையும் உருவாக்கி இரண்டையும் வளர்த்தார். அவை மூன்றும் இருந்திட்ட பகுதி 'திருவிடம்' ( திரு= கடவுள்கள், தேவர் தேவதைகள், குலதெய்வங்கள், குடும்ப ஆண்டவர்கள், பட்டவர்கள் எனும் நான்கு வகைப்பட்ட அருளுலகத்தவர்களும், முனிவர்களும், இருடிகளும், கணங்களுமிருந்து செயல்படும் இடம். இதுவே திரு+இடம் = திருவிடம் - திராவிடம்.'திராவிடம்' என்றால் அருளுலகத்தவர்களும், பத்தியாளர்களும் தங்கும் இடம். எனவே திராவிடர் என்றால் பத்தியாளர்கள் ஆன்மீக வாதிகள், ஆத்திகர்கள் என்ற பொருள்தான் சித்தர்களால் வழங்கப்படுகிறது.

10. இப்படி ஆதிசிவனார் தமிழ்மொழி வாயிலாகத் திராவிடர்களை (பத்தியாளர்களை) உருவாக்கினார். இந்தத் திராவிடர்களை ஏழாயிரம் கல் தொலைவு பரந்து விரிந்து கிடக்கும் குமரிக்கண்டம் முழுதும் அனுப்பித் தமிழ் மொழியினையும், இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பரப்பினார்.

11. ஆதிசிவனார் தமிழே 'இந்து வேதம்' தமிழே 'இந்துமதம்' தமிழில் பேசுவதே சிறந்த பூசை தமிழ் வளர்க்கப் பாடுபடுவதே பெரிய பெரிய ஓமங்களையும், ஓகங்களையும் யாகங்களையும், யக்ஞங்களையும், வேள்விகளையும் செய்வதற்குச் சமமாகும்: தமிழ் நூல்களைப் பாதுகாத்தல் கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்கும் சமம்... என்று பலவாறு தமிழ் மொழியைச் சிறப்பிக்கின்றார்.

12. அதாவது, ஆதிசிவனார் தமிழ்மொழி செழிச்சி நிலையையும், ஆட்சி நிலையையும் பெற்றிருந்தால் தான் தமிழினம், தமிழ்ப்பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழ்நாடு .... என்பவையெல்லாம் வளவளர்ச்சியையும், செழிச்சியையும், ஆட்சியையும் பெற்றிட முடியும், என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.



13. சித்தர்கள் 'ஏந்தரீகம்' 'தாந்தரீகம்' என்ற அருட்கலைகளின் மூலம், இந்த உலகம் முழுதும் மனிதர் பூசை செய்ய, வழிபாடு செய்ய, சாமிகும்பிட.... கோயில்களை உண்டாக்கினார்கள். இந்தக் கோயில்களை குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்குச் செய்ய வேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

14. அதாவது, விண்ணுலகிலிருந்து, வேற்று அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்திட்ட கடவுள்கள் என்றும்: இம்மண்ணுலகிலேயே தோன்றிய கடவுள்கள் என்றும் இரண்டு பெரிய பிரிவினைகள் அருளுலகில் உள்ளன. இவற்றிற்கேற்பவே இவற்றைப் பூசை செய்யும் முறைகளும் ஏற்படுகின்றன. இதனால் மனிதர்கள் தங்களுடைய குறைகளையும், ஏமாற்றங்களையும், ஏக்கங்களையும், தோல்விகளையும், துன்பங்களையும், தொல்லைகளையும் அகற்றிக் கொள்ள அருள் எனும் மருந்தைப் பெற்றிடுவதற்குரிய இடம் தான் கோயில். இதே சமயம், மக்கள் தங்களுடைய வெற்றிகளுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் துணையாக அருள் எனும் விருந்தைப் பெறுகின்ற இடமும் கோயில் தான். எனவே தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முதுரை பிறந்தது.

15. ஆதிசிவனார் அவருக்கு முன் செயல்பட்டிட்ட அநாதி சிவன்கள் அருளிய அருட்கலைகளோடு சேர்ந்து செயல்பட

'நான்மறை' 'நான்முறை' 'நானெறி' 'நான்வேதம்'... என்று வழிபாட்டுக்குரிய வழி வகைகளை அருளினார். அத்துடன், இம்மண்ணுலகு உய்யும் பொருட்டு கடவுள்களை அணுகும் முறைகளைப் பலவாறாக வழங்கியுள்ளார்.

16. பொதுவாக, எல்லா மக்களும் கடவுளை நினைத்துத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறார்கள். ஒரு சிலர் வாழ்வில் வெற்றிகள் கிடைக்கும் பொழுது; அதற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லச் சிறப்பான பூசைகள் செய்கின்றார்கள். இதே போல், ஒரு சிலரின் வாழ்வின் தோல்விகளும், தொல்லைகளும் மிகுதியாக ஏற்படுகின்றன. அப்பொழுது, மக்கள் கடவுள்களிடம் மிகவும் வருத்தத்துடன், பூசைகளைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட பூசைகளை ஆதிசிவனார் தமது இருக்கு வேதத்திலும், முருகப் பெருமான் தன்னுடைய அசுரவேதத்திலும் (யசூர் வேதம்) அதர்வான வேதத்திலும், யாமவேதத்திலும் (சாம வேதத்திலும்) மிகத் தெளிவாப் பூசை முறைகளைக் கூறியுள்ளார்கள்.

1. பூசை செய்தல் 2. கும்பிடுதல்

3. வணங்குதல் 4. வழிபாடு செய்தல்

5. பரவுதல் 6. அரற்றுதல்

7. பாடுகிடத்தல் 8. அழுகை செய்தல்

9. தொழுகை செய்தல் 10. எள்ளல் செய்தல்

11. ஏசல் செய்தல் 12. தவம் செய்தல்

என்றிப்படிப் பன்னிரெண்டு வகைகளை வழங்கியுள்ளார்.

17. இந்த அளவுக்கு மனிதர்கள் மீது அன்பும், அருளும், பரிவும்,



இரக்கமும் உடையவர்கள் நமது இந்து மதக் கடவுள்கள். எனவே கடவுள்கள் மொத்தம் (8,84,736) எட்டு இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து எழுநூற்றி முப்பத்தாறு வகைக் கடவுள்கள் என்ற குறிப்பையும் வழங்குகிறார், ஆதிசிவன், இவர், தமது இருக்கு வேதத்தில் கடவுள்கள் பற்றிய பேருண்மைகளை மேலும் தெளிவாக்குகிறார்.

18. (i) குடும்ப ஆண்டவர்கள்:- , பட்டவர்கள் - இன்றைய வாழ்வில், தமது முன்னோர்களால் இறந்து போனவர்களை ஆண்டவராக வழிபடுதல்.

(ii) குலதெய்வங்கள்:- குறிப்பிட்ட குடும்பத்தின் பங்காளிகள், அல்லது உறவு முறைக்காரர்கள் ஒன்று கூடிப் பரம்பரைப் பரம்பரையாகப் பூசை செய்து வரும் தெய்வங்கள்.

(iii) ஊர்த்தேவர் தேவதைகள்:- இதில் பெரும்பாலும் அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்திட்டவர்கள். இவர்களைச் சார்ந்தே குக்கிராமங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள்.... எல்லாம் உண்டாகின்றன. மேலும், ஊர்த்தேவர், தேவதைகள் என்று ஆண், பெண் இருபாலாரும் தேவநிலையில் இருந்து மக்களைப் பாதுகாக்கிறார்கள். இவர்கள் அந்த ஊர்க்காரர்களை மட்டுமே பாதுகாப்பார்கள். இதே போல் அந்தந்த குடும்ப ஆண்டவர்கள், பட்டவர்கள் எனப்படும் ஆண்டவர்கள் அந்தந்தக் குடும்பத்தார்களை மட்டுமே பாதுகாத்திடுவர். அருள் புரிந்துவிடுவர். இது போல் தான், குலதெய்வங்கள் அவரவருக்குரிய சந்ததியினரைத்தான் பாதுகாக்கும்; அருள் வழங்கும்.

(iv) இதேபோலத்தான் நாட்டுக் கடவுள்கள் அந்தந்த நாட்டுக்கு உரியவர்களை மட்டுமே பாதுகாத்திடுவார்கள் அருள் வழங்கிடுவார்கள். அவை தான் சித்தர்களின் கடவுட்கொள்கை. சித்தர்களின் இந்த 'கடவுட்கொள்கை' தான் அண்ட பேரண்டங்கள் முழுதும் நடைமுறையில், செயல்வடிவில், வழக்கில் வாழுகின்றது. இந்தக் கடவுட் கொள்கையை உலக மக்கள் உணர்ந்து கொண்டால் மதக் கலவரங்கள், மதச் சண்டை சச்சரவுகள், மதச் சிக்கல்கள் மதப்போர்கள் முதலியவை உண்டாக்கப்படவோ, அல்லது உருவாக்கப்படவோ, அல்லது உருவாகவோ... முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!!!!

19. அதாவது, சித்தர்களின் தத்துவமும், வேதமும், வேதாந்தமும், சித்தமும் சித்தாந்தமும் தான் 'உலக ஒற்றுமை "உலக அமைதி" உலகச் சமாதானம்' 'உலகச் சகோதரத்தத்துவம்' உலக அளவில் மொழி விடுதலை, இன விடுதலை உலக அளவில் பண்பாட்டு விடுதலை, நாகரீக விடுதலை உலக அளவில் தனிமனிதத்துவ விடுதலை தனிமனித உரிமை..... முதலியனவற்றை உருவாக்க முடியும்!!! முடியும்!!! முடியும்!!!

20. இப்படிப் பதினெண்சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், கடவுள்களின் வகைகளளை நான்காக பிரித்துக்காட்டுகிறார்கள். இதனால் உலக அளவில் மதமாற்றமோ, போராட்டமோ, போரோ ஏற்பட வாய்ப்பே இல்லை. இதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால்

(i) ஒரு குடும்பத்துக்கு உரிய 'குடும்ப ஆண்டவர்கள்' வேறு எந்தக் குடும்பத்துக்கும் அருளோ, பாதுகாப்போ உதவியோ வழங்க மாட்டார்கள்.

(ii) ஒரு குடும்பத்துக்கு உரிய 'தெய்வங்கள்' வேறு எந்தக் குலத்தார்க்கும் உதவியோ, பாதுகாப்போ, அருளோ வழங்க மாட்டார்கள்.

(iii) ஓர் ஊருக்குரிய தேவர் தேவதைகள் வேறு எந்த ஊரார்க்கும், பாதுகாப்போ, அருளோ! உதவியோ! வழங்கமாட்டார்கள்.

(iv) ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் வேறு எந்த நாட்டுக்கும் உதவியோ, அருளோ, பாதுகாப்போ வழங்க மாட்டார்கள்.

21. இவ்வாறு கடவுளர் உலகம் பற்றி ஆதிசிவனார் அருளிய உண்மைகளைத்தான் மற்ற பதினெண் சித்தர்களும் நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் சேர்ந்து எல்லா வகையான இந்து மதச் சடங்குகளையும், சாத்திர சம்பிரதாயங்களையும், திருநாள்களையும், திருவிழாக்களையும், உருவாக்கினார்கள். எனவே, சித்தர்களின் மதமான இந்து மதம் தான் உலக மதங்களை எல்லாம் சமத்துவமாக, ஒற்றுமையாக வாழச் செய்வதற்காகத் தோன்றிய மதம். இதனைத் தோற்றுவித்தவர் ஆதிசிவனார். இந்த இந்து மதமே அண்ட பேரண்டங்கள் அனைத்திலும் வாழுகின்ற மதம்.

22. கடவுள்களில் ஒரு குடும்பத்தை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (ஆண்டவர்) என்றும், ஒரு குறிப்பிட்ட குலத்தாரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் '(தெய்வங்கள்)' என்றும் ஓர் ஊரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (தேவர் தேவதைகள்) என்றும், ஒரு குறிப்பிட்ட

நாட்டாரை மட்டும் காப்பாற்றும் கடவுள்கள் (நாட்டுக் கடவுள்கள்) என்றும் மிகத் தெளிவாகச் சித்தர்கள் இந்து மதக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், குறிக்கோள்களையும் விளக்குகிறார்கள்.

23. இவ்வளவு விளக்கங்களையும் முறையாகக் கற்றுணரல் எளிது. எல்லோருக்கும் புரியும்படியாகச் சித்தர்களின் இந்து மதம் விளக்கப்படுகிறது. எனவே, யாரும் கடவுள்களின் பெயராலோ, கோயில்களின் பெயராலோ, சாதிகளின் பெயராலோ, பிரிவினை பேசுவதோ, ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்வதோ, அதாவது தனிமனிதனோ, குடும்பமோ, தங்கள் தங்களின் விருப்பப்படி புதிய புதிய கடவுள்களை ஏற்று போற்றி கும்பிடுவது பயனளிக்காது. எனவே மதமாற்றங்கள் எந்த ஒரு நன்மையும் தராது பயனற்றது தேவையற்றது என்ற பேருண்மை தெளிவாகிறது. எனவே, உலக மக்கள் அவரவரின் முன்னோர்கள் பூசை செய்த கடவுள்களையே வாழையடி வாழையென வழிபட்டு வர வேண்டும். இது தான் அருளுலக உண்மை. இந்த உண்மையின் படி உலக மக்கள் வாழ்ந்திட்டால் உலக ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு, உலக அமைதி, உலக அன்பு, உலக சகோதரதத்துவம் முதலியவை முளைத்துக் கிளைத்துச் செழித்தோங்கிடும்.

24. இவற்றைத் தான் சித்தர்கள் உலக மனித குல நன்மைக்காகவும், மேன்மைக்காகவும், அருளியுள்ளார்கள். மேலும் சித்தர்களின் இந்து மதப்படி வீடுதோறும் பூசையறை, தெருக்கள் தோறும், கோயில்கள், ஊர்தோறும் எல்லைகளில் கோயில், நாடு தழுவிய பெரிய பெரிய



கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

25. தனிமனித வழிபாடு, குடும்ப வழிபாடு, குலத்தார் வழிபாடு, ஊரார் வழிபாடு, நாட்டு மக்கள் வழிபாடு என்று ஐந்து வகைப்பட்ட வழிபாடுகளையே சித்தர்கள் அருளியுள்ளார்கள். எனவே, இந்து மதத்தில் எல்லா வகையான வழிபாடுகளும் இருப்பதை உணர்ந்து, இந்துக்கள், இந்து மதத்தின் அருமை, பெருமை, அரிய பயன் முதலியவற்றை உணர்ந்து பெருமிதம் பெற வேண்டும்.

26. சித்தர்கள் தங்களின் இந்து மதத்தில் எட்டுத் திசைகள், கல், மண் அனைத்து வகையான பயிரினங்கள், உயிரினங்கள்.... முதலிய அனைத்தையும் வழிபாட்டுக்குரிய கடவுள்களாகவே அறிவிப்புச் செய்துள்ளார்கள். அது மட்டுமல்ல, இவைகளை வழிபடும் நெறிமுறைகளையும், பூசை விதிகளையும், பூசைக்குரிய படையல் பொருட்களையும் விவரித்துள்ளார்கள். இவற்றால் சித்தர்களின் கொள்கையும் கோட்பாடும்; நடைமுறைகளும் முழுமையானவை; எளிமையானவை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதாவது, சித்தர்களின் மதம் ஒரு முழுமையான மதம் என்பது புரிகிறது.

27. சித்தர்கள் பூசை முறையிலும் முழுமையான செயல் சித்தாந்தத்தை அருளியுள்ளார்கள்.

(i) திருமுறைப்பூசை

பத்தியாளர்கள், தங்களின் பத்தியுணர்வில், தங்களையே மறந்து உணவு, உடை, உறையுள், பெற்றோர் உற்றார், உறவினர் நண்பர்.... முதலிய அனைவரையும் மறந்து வாழ்வார்கள். எந்தவிதமான பூசை நெறியையும்

பின்பற்றாமல் தங்களின் மனதுக்குத் தோன்றிய முறைகளில் எல்லாம் பூசை செய்வார்கள்.

(ii) தருமுறைப்பூசை

பத்தியாளர்கள், தங்களுக்குக் கிடைக்கக் கூடிய பயிரினங்களின் வேர், தண்டு, இலை, பூ, காய், கனி, கிழங்கு.... முதலியவைகளைக் கிடைக்கின்ற பசுமை மாறாமல் படைப்பதும், பக்குவமாகச் சமைத்தும் படைப்பதுமாக இருவகைகளில் பூசை செய்வார்கள்.

(iii) கருமுறைப்பூசை

பத்தியாளர்கள், தாங்கள் உண்ணக் கூடிய உயிரினங்களைப் பலியிட்டும், சமைத்துப் படைத்தும் பூசை செய்வார்கள்.

(iv) குருமுறைப்பூசை

பத்தியாளர்களில், தாங்கள் உண்ணக் கூடிய உயிரினங்களை பலியிட்டும், சமைத்து பூசிப்பதை விட, பலர் தங்களுடைய விழியாக வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக விளங்குகின்ற குருவையே கடவுளாக ஏற்றுக் கொண்டிடுவர். அதனால் குருவுக்குத் தொண்டு செய்வதையே கடவுளைப் பூசை செய்வதாகும் என்ற இருக்கு வேதக் கருத்தைச் செயலாக்கியே வாழுகின்றனர். இப்படி, நான்கு வகைப்பட்ட பூசை முறைகளைச் சித்தர்கள் அருளியுள்ளார்கள்.

28. அண்ட பேரண்டங்கள் ஆளும் மூலப் பதினெண் சித்தர்களின் அறிவிப்பின்படி அனாதி சிவன்களின் காலமான (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தையாயிரத்து



தொளாயிரத்து இருபது ஆண்டுகளில், தமிழ் மொழியும் இந்து மதமும் வளர்க்கப்படும் முயற்சியில் குமரிக்கண்டம் எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் பரவலாக ஆங்காங்கே, தமிழ்மொழியும், இந்து மதமும், சிறிய சிறிய அளவில் திட்டுத் திட்டாகத் தான் பரவின. எனவே தான் ஆதிசிவன் 1. பதினெண் சித்தர்கள். 2. பதினெட்டாம் படி கருப்புகள் 3. நாற்பத்தெட்டு வகை வழிபடுநிலையினர்கள். 4. நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள் 5. நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள் எனும் விண்வெளி ஐவர்குழு என்ற குழுவுடன் இம்மண்ணுலகுக்கு வந்தார். அவர் இம்மண்ணுலக (பார் - உலகம். வதி-வாழ்பவர் - பார்வதி) மங்கையான பார்வதியை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த மகனே முருகன். இந்த முருகனுக்கு இருமனைவியர். தெய்வானை, வள்ளி இருந்தும், வாரிசு இல்லாததால் தான் பதினெண்சித்தர்களில் முதல்வரான சித்தர் கருவூறார் பீடாதிபதியாகவும், மடாதிபதியாகவும் பொறுப்பேற்று வருகின்றார்கள். எனவே தான் அண்ட பேரண்டங்களிலிருந்து அடுத்தடுத்து அருளாட்சிப் பணிக்குப் பொறுப்பாளர்களாக வந்திட்ட பல்லாயிரக்கணக்கான ஆதிசிவன்கள் பதினெண்சித்தர் பீடத்துக்கும் மடத்துக்கும் உரிய ஆதரவை நல்கி வருகின்றனர்.

29. அனாதிசிவன்களின் காலங்களில் எண்ணூறுக்கும் மேற்பட்ட மதங்களும், மொழிகளும், இருந்திருக்கின்றன. இவற்றோடு பதினெண் சித்தர்களின் தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியும், அண்ட பேரண்ட மதமான

இந்து/ மதமும், போராடின. போராட்டம் நீடித்தது. அதில் ஒரு பெரிய திருப்பத்தைக் கொண்டு வர ஆதி சிவனாரும் விண்ணுலக ஐவரும் வந்தனர்.

30. ஆதி சிவனாரும், விண்ணுலக ஐவர்குழுவும் நான்கு யுகங்களுக்கு அருள் உலக வெற்றியை அடைய திட்டமிட்டனர். இத்துடன் மூன்று யுகங்களும் முடிந்து நான்காம் யுகம் பிறந்து 5098 வருடங்கள் ஆகின்றன. முதல் யுகமான

| | | |
|---|---|---|
| கீரன், யுகம் | - 17,28,080 | ஆண்டுகள் |
| இரண்டாவது | | |
| யுகமான தீரன் யுகம் | - 12,90,000 | " |
| மூன்றாவது யுகமான | | |
| தூரன் யுகம் | - 8,64,000 | " |
| நான்காவது யுகமான | | |
| கலியன் யுகம் | - 5,098 | " |
| | ------------ | |
| | 38,87,175 | |
| | ------------ | |

எனவே இம்மண்ணுலகம் இன்னும் கலியுகம் (4,32,000 - 5098 = 4,26,002)

நான்கு இலட்சத்தி இருபத்தாராயிரத்தி இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. இந்தக் காலக் கெடுக்குள் எல்லாம் நிறைவேறி இம்மண்ணுலகு, விண்ணுலகச் சாதனைகள் மூலம் முழுமை பெற்றிடும்!




31. இதற்காகத்தான் அனைத்து வகைப்பட்ட கடவுள்களின் மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் .... முதலிய அனைத்து பூசை மொழிகளும் வெளியிடப்பட்டு வருகின்றன. இது போல் **வேறு எந்த மொழிகளிலும் காயந்திரிகள் இல்லை.** இவற்றில் முதன்மையான சில காயந்திரி பூசை மொழிகள் இந்நூலின் இறுதியில் வெளியிடப்படுகின்றன. இவற்றின் அறிய பயன்களை அநுபவப்பூர்வமாக உணர்ந்து கொள்ளலாம். அதாவது, 1. குடும்ப ஆண்டவர் பட்டவர் 2. குல தெய்வங்கள் 3. ஊர் தேவர் தேவதைகள் 4. நாட்டுக் கடவுளர்கள் என்று நான்கு வகைப்பட்ட அருளுலகத்தவர்கள் இருக்கிறார்கள் என்ற பேருண்மை தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும் தான் இருக்கின்றன. இவற்றை அநுபவப் பூர்வமாக உணரும், ஆற்றல் தமிழ் மொழி கற்ற தமிழர்களாகிய இந்துக்களுக்கு மட்டுமே அதிகமாக இருக்கிறது.

32. இக்கலியுகத்தில் கருவழியாக, குருவழியாக தயாராகிடும் பத்தியாளர் மட்டுமே ஓதி உணர்வதற்கென்று 1. ஓமம் 2. ஓகம் 3. யாகம் 4. யக்ஞம் 5. வேள்வி மூலம் ஐந்தீ வேட்டல் பூசை முறையும் எல்லா வகைப் பாதிப்புகளையும் அகற்றித் தருவதற்காக இன்றைக்கு எல்லா மக்களும் அனுபவிக்க வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படுகின்றன.

33. இப்படி உலக மக்களின் நலத்திற்காக, வளத்திற்காக,. மேம்பாட்டிற்காக அருளுலக உண்மைகள் கதைகள்.... தீவிரமாக குருவழிக் கல்வி மூலம் பதினெண் சித்தர் மடத்தில், பீடத்தில் அருளப்படுகின்றன. ஆதிசிவனார் உலகில் மொழிச்சண்டை, மொழிப்போர்; இனச்சண்டை இனப்போர்; மதச் சண்டை மதப்போர்; எனப்படுவைகள்

எல்லாம் தடுத்து நிறுத்தி, அமைதிப்படுத்திட அருளுலகப் பேருண்மை ஒன்றினை (படம் வரைந்து) சித்திரம் தீட்டி விளக்கி உள்ளார் ஆதிசிவனார்.




இதனையே பதினெண் சித்தர்களும், 48 வகைச் சித்தர்களும் தங்கள் தங்களால் இயன்றவரை வலியுறுத்தி வெளியிட்டு வருகிறார்கள். இதற்கு 'மஞ்சள் முக்கோண சத்தி பீட விளக்கம்' என்று பெயரிட்டு குறிப்பிடுகின்றனர் சித்தர்கள். அதாவது இந்த முக்கோணச் சித்திரத்தின் மூலம், கடவுள் எனப்படுவர் (இங்கு கடவுள் என்ற சொல் ஆண்டவர், தெய்வம், தேவர், தேவதை என்ற அனைவரையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. நாடு, மொழி, இனம் எனும் முக்கோண எல்லைக்குள் இருப்பவரேயாகும். எனவே எந்த மொழியைச் சேர்ந்த கடவுளையோ, இனத்தைச் சேர்ந்த கடவுளையோ, யாரும் எல்லா மொழியினருக்கும், எல்லா இனத்தவருக்கும், எல்லா நாட்டவருக்கும் உரிய பொதுக் கடவுள் என்று கூற முடியாது; கூறக் கூடாது; கூறுவது தவறு ஆகும்.

34. இன்றைக்கும் ஒவ்வொரு மதமும், மதத்திற்குரிய கடவுளுக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியையே தமது கடவுளது என்று கூறுகிறார்கள். அம்மொழி வழியாகத்தான் தமது கடவுளர்களுக்கு பூசை செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். அம்மொழி வழியாகத்தான் தமது கடவுளர்களுக்கு பூசை செய்ய வேண்டும் என்று



கூறுகிறார்கள். அதாவது ஒவ்வொரு மதத்திற்கும் பூசை செய்யப்பட பூசை செய்யக்கூடிய மொழிகள் என்று ஒரு குறிப்பிட்ட மொழியைத் தான் விரும்புகிறார்; நம்புகிறார்; ஏற்றுக் கொள்கிறார். அம்மொழி வழியாக அவரை வணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இக்கருத்தைத் தான் எல்லா மதத் தலைவர்களும் குருமார்களும் சாத்திரியார்களும் பூசாரிகளும் கூறுகின்றனர்.

35. இரண்டாவதாக ஒவ்வொரு மதத்திற்குரிய கடவுள்களும், ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டுமே உரியவர் என்று கூறுகிறது அதாவது, ஒவ்வொரு மதத்திற்கும் உரிய மூல அல்லது முதல் கடவுள் அல்லது தலைமையான கடவுள் ஒரு குறிப்பிட்ட இனத்தில் உள்ள ஒருவரை தமது வாரிசாக, தமது பதிலியாக, தமது தூதுவராக, மகனாக .... தேர்ந்தெடுத்து அருட்செல்வங்களை மக்களுக்கு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட இனத்தார் தான் அந்த மதத்தின் மேலாண்மையாளராக செயல்பட்டு வருகின்றார்கள். மேலும் இந்த இனத்தவர்களுக்கு உரிய உணவு வகைகள் உடை வகைகள், அணிகலன் வகைககள், இசைக் கருவிகள்.... முதலியவைகளை ஏற்றுக் கொள்பவராக நடைமுறையில் சமயச் சட்டம் இருக்கின்றது. இதை இன்றைக்கும் வழக்கத்தில் காணுகிறோம். அதாவது ஒவ்வொரு மதத்தினருக்கும் தமது மதத்துக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட வகைக்குரிய அகப்பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் பெற்று வாழுகிறார்கள். எனவே கடவுள் என்ற பொதுச் சொல் குறிக்கின்ற அனைத்து அருளுலகத்தவர்களும் அவரவருக்கென்ற அகப் பண்பாட்டையும், புறநாகரீகத்தையும் பெற்றுள்ளார்கள்.

இந்த அகப் பண்பாடும், புற நாகரீகமும் ஒவ்வொரு இனத்துக்கும் தனியாக இருக்கின்றன. எனவே தான் குறிப்பிட்ட கடவுள், குறிப்பிட்ட இனத்துக்கே உரியவராகிறார். அதாவது கடவுள் என்பவர் இனப்பற்றும், மொழிப்பற்றும், பண்பாட்டுப் பிடிப்பும், நாகரீகத் துடிப்பும் உடையவராகவே விளங்குகின்றார் என்ற பேருண்மை விளக்கமாகின்றது.

36. ஒவ்வொரு மதமும், தனது மதத்தைத் தோற்றுவித்த மூலவர், தலைவர் பிறந்து வளர்ந்த நாட்டையே புனித இடமாக கடவுள் வாழும் இடமாகக் கருதுகிறார்கள். அதாவது ஒவ்வொரு மதமும், ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கே உரியதாக கருதப்பட்டு வருகிறது. அதற்காகத்தான் ஒவ்வொரு மதமும் தங்களது மூலவர் அல்லது தலைவர் பிறந்த நாட்டிற்கு புனிதப் பயணம் சென்று வருகிறார்கள். இதன்படி பார்த்தால் ஒவ்வொரு கடவுளும் ஒவ்வொரு நாட்டுக்கு உரியதாகக் கட்டுப்பட்டு வாழுகின்றது; என்ற பேருண்மை விளங்குகின்றது.

37. எனவே ஒவ்வொரு கடவுளும் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கும் அந்த நாட்டின் குறிப்பிட்ட இனத்தாருக்கும், அந்த இனத்தாரின் அகப்பண்பாட்டிற்கும், புறநாகரீகத்திற்கும், மொழிக்கும் கட்டுப் பட்டவராகவே இருக்கின்றார் என்ற பேருண்மை தெளிவாகின்றது. இதே போல் ஒவ்வொரு குறிப்பிட்ட கோயிலிலும், குறிப்பிட்ட மொழியில் பூசை செய்வதும், குறிப்பிட்ட இசைக் கருவிகளை இசைப்பதும், குறிப்பிட்ட உணவுவகைகளை படைப்பதும் குறிப்பிட்ட உடை வகைகளை அணிவிப்பதும் குறிப்பிட்ட அணிகலன்களை அணிவிப்பதும் மக்களிடையே நிலையான இடத்தைப் பெற்றுவிட்டன. இது மட்டுமல்லாமல் ஒவ்வொரு



மதத்திற்கும் என்று தனிப்பட்ட திருநாள்களும், திருவிழாக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைமுறையில் செயலாகி வருகின்றன.

38. எனவே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற முழக்கம் தவறானது, பிழையானது, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது ஆகும். கடவுள்கள் காலங்கள் தோறும் அண்ட பேரண்டங்களிலிருந்து வருபவர்களாகவும், இம்மண்ணுலகிலே கணிசமான அளவு கடவுள்கள் பிறக்கின்றார்கள், தோன்றுகின்றார்கள் என்பதே உண்மை! நான்கு வேதங்களிலும் கடவுளர்கள் 8,84,736 வகையினர் என்று குறிக்கப்படுகிறார்கள் அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகிற்கு வந்து நிலையாக இம்மண்ணுலகிலேயே தங்கியவர்கள்.

1. 33,000 கோடி தேவர்கள்
2. 48,000 கோடி இருடிகள்
3. 1,000 கோடி தேவதைகள்
4. 96,000 கோடி கணங்கள்
5. 108,000 கோடி முனிவர்கள்

எனும் மண்ணுலக ஐவர்குழு ஆகும்.

39. சித்தர்கள் இம்மண்ணுலகில் மானுடர் அருட் செல்வங்களைப் பெறுவதற்காக 108 வகைப்பட்ட திருப்பதிகள் 243 வகைச் சத்தி பீடங்கள்; 1008 வகைப்பட்ட சீவாலயங்கள் என்று மொத்தம் 1359 வகைப்பட்ட வழிபடு நிலையங்களை உண்டாக்கியிருக்கிறார்கள்.

40. சித்தரியல் அல்லது சித்தரிசம் என்ற கோட்பாடும், செயல்பாடும் வாழையடி வாழையாக பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றன. இதற்கு காரணம்

(i) சித்தர்கள், சொற்கோயில்களை (நூல்களை) உருவாக்குவதுடன் எண்ணற்ற கற்கோயில்களையும் உருவாக்கி வருகிறார்கள்.

(ii)சித்தர்கள், நூல்களை மட்டும் எழுதாமல் அவற்றை மக்கள் விரும்பி படிக்கும்படி செய்யக் கூடிய ஆள்களையும் உருவாக்கி இருக்கிறார்கள்.

(iii) சித்தர்கள், மிகுதியாக உரைநடை நூல்களையும், குறைந்த அளவு கவிதை நடை நூல்களையும் எழுதி இருக்கிறார்கள். எனவே தான் சித்தர்களின் இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும், காலங்கள் தோறும் கருத்துப் புரட்சியையும், சிந்தனைச் செழிச்சியையும், அருளாட்சியையும் விளைவித்துக் கொண்டே இருக்கின்றன.

(iv) சித்தர்கள், எல்லா வகைப்பட்ட கோயில்களிலும் கோயில்களில், உள்ள எல்லா வகைப்பட்ட கடவுளர்களையும் காலங்கள் தோறும் வழிபட்டு பத்தி செய்து சத்தி, சித்தி, முத்திகளைப் பெற்றிட வழிவகை செய்கிறார்கள்.

1. இவற்றையெல்லாம் இந்த கலியுகத்தில் மீண்டும் மீண்டும் மக்களிடையில் செயலாக்கம் பெறுமாறு செய்திட இன்றைய பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் கருவூறார் ஞானாச்சாரியார் அவர்கள் அரும்பாடு பட்டு பல்லாயிரக்கணக்கான சித்தர்களை உருவாக்கியுள்ளார்; இன்று மென்மேலும் சித்தர்களை உருவாக்கி கொண்டுள்ளார். எனவே, சித்தர்களை ஒன்று கூட்டி சித்தரியம், சித்தரியல் எனப்படும் அருளுலக வாழ்வியல்களை மறுமலர்ச்சியும் வளவளர்ச்சியும், ஆட்சி மீட்சியையும் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவே சித்தர்கள் மாநாடு கூட்டப்படுகிறது.



42. (i) சித்தர்கள் ஞானம், அகஞானம், புறஞானம் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் என்று அறிவியல்களையும் அருளியல்களையும் ஐந்து பெரும் வகையாக அருளியுள்ளார்கள்.

(ii) ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றும் பற்றிக் கூறியுள்ளவையாகவும்,

(iii) உடற்கூறுகள் பற்றி மருத்துவத்துறைக்கு அருளியுள்ளவையாகவும்

(iv) இலக்கியத்துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

(v) வரலாற்றுத்துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

(vi) உயிரியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்,

(vii) பயிரியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்

(viii) மண்ணியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்

(ix) விண்ணியல் துறைக்கு அருளியுள்ளவையாகவும்

என்று இப்படி சித்தர்கள் அருளியுள்ளவைகளைத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து உணர்ந்து செயலாக்கிட வேண்டும் எனபதற்காகவே இன்று வாழும் பதினெண் சித்தர் பீடாதிபதி, மடாதிபதி சித்தர் கருவூறார் அவர்கள் இந்த சித்தர்கள் மாநாட்டை கூட்டுகிறார். இந்த

மாநாட்டின் அடிப்படையில் தொடர்ச்சியாக தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் சித்தர்கள் மாநாடு கூட்டப்பட வேண்டும். அப்போது தான் இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலங்களிலும் சித்தர்கள் மாநாட்டைக் கூட்ட முடியும்! அதன் பிறகு இந்திய நாடு முழுவதும் தழுவிய சித்தர்கள் மாநாட்டைக் கூட்ட முடியும்! கூட்ட வேண்டும். இவற்றையெல்லாம் முடித்த பிறகு தான் உலக நாடுகளின் இணைப்பாக, 'உலகச் சித்தர்கள் மாநாடு' என்று ஒன்றினை கூட்டப்பட வேண்டும், கூட்டப்பட முடியும்.

44. இப்படி, படிப்படியாக பலநிலைகளில் சித்தர்கள் மாநாடு, கூட்டப்பட இருக்கின்றன. இம்முயற்சிக்கு முதல் கட்டமாக, ஆரம்பமாக, அருளாட்சித் திருநகரான மாமூதூர் மதுரை மாநகரில் சித்தர்கள் மாநாடு கூட்டப் படப்படுகிறது.

இந்த அளவில் இன்றைக்கு நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும், அமர்ந்து அருளாட்சிப் பணி புரியும் ஞாலகுரு குருமகா சன்னிதானம் அரசயோகி ஞானாச்சாரியார் சித்தர் கருவூறார் எல்லோரையும் சித்தர்களாக்கிட கருத்து விளக்கங்களை, அருளி நிறைவு செய்கிறார்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்